**CC.No.52/2023 (JM.No.II, DHARMAPURI)**

**20.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW– 1 : திரு. நெப்போலியன், த/பெ. வரதராஜன்**

**<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

1. மேற்படி WP No. 2029/2021, நாள்: 02.02.2021 ன் படி மாண்புமிகு உயர்நீதிமன்றம் இவ்வழக்கு குறித்த பிரச்சினை உரிமையியல் சம்பந்தமாக பிரச்சினை என்னும் போலிஸார் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், தரப்பினர்கள் சிவில் நீதிமன்றத்தை நாட வேண்டும் என்றம் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக 1–ம் எதிரி CRL.O.P.NO.55/2021 என்ற மனு மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவின் கீழ் போலிஸார் தரப்பில் புகார் எதுவும் நிலுவையில் இல்லை என்று கூறப்பட்டதால் 17.04.2021 ம் தேதி அன்று முடிக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எதுவும் தெரியாது. நான் புகார் கொடுத்து அது தொடர்பாக 1–ம் எதிரி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்தார் என்றாலும், அவ்வழக்குகள் மாண்புமிகு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் அதைப்பற்றி எதுவும் தெரியாது. உயர் நீதிமன்றம் மேற்படி பிறப்பித்த உத்தரவுகளை மறைத்தும், மாவட்ட குற்றபிரிவு காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் குறித்த நடந்த விசாரணைகளை மறைத்தும், புதியதாக ஒரு புகாரை கொடுத்தது போல் போலிஸ்க்கு அழுத்தம் கொடுத்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இது குறித்து மாவட்ட குற்ற பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார். மாவட்ட குற்ற பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் " 03.08.2020 ம் தேதியிட்ட புகாரை மாவட்ட துணை கண்காணிப்பாளரிடம் கொடுத்துகொண்டேன். புகார் மீது விசாரணை செய்து பின்பு நான் கொடுத்த புகார் மனு மீது தருமபுரி மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 09/2021, இதச பிரிவு 465, 468, 471 ன் கீழ் 07.05.2021 ம் தேதி வழக்கு பதிவு செய்து கொண்டு என்னை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள்" என்று கூறியுள்ளேன் என்றாலும் அவ்வாறு சொல்லியுள்ள விவரங்கள் சரிதான் என்றால் சரிதான்.

2. 1–ம் எதிரியின் அம்மா ரஞ்சிதத்திற்கு நானும், என்னுடைய சகோதரரும் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். 1–ம் எதிரியின் குடும்பதார்கள் ரவிசந்திரனுக்கும் அவருடன் உடன் பிறந்தவர்களுக்கும் சேர்ந்து ரஞ்சிதம் உயிருடன் இருக்கும் போதே 1–ம் எதிரி ரவிசந்திரனுக்கு சொத்துகளை ஒதுக்கி குடும்ப ஏற்பாடுகள் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய சொத்துகளை 2–ம் எதிரி வரதராஜனும், 1–ம் எதிரி இரவிசந்திரனும் சேர்ந்து 3–ம் எதிரியின் மேல் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். வரதராஜன் அவருடைய வாழ்நாளில் முதல் மனைவியின் வாரிசுகளுக்கு சொத்துகளை பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விவசாய நிலங்களை எழுதி கொடுத்துவிட்டார். வீட்டு நிலத்தை எழுதி கொடுக்கவில்லை. அதை எதிரிகள் போலி பத்திரம் செய்து எழுதி கொண்டனர். நான் புகார் அளித்த போது என்னுடைய அப்பா வரதராஜன் மீதும் புகார் அளித்தேன் என்றால் சரிதான். அவரும் எதிரியாக இருந்து தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி குடும்ப சொத்துகளை

மாற்றி மாற்றி தான செட்டில்மெண்ட் பத்திரம் என்னுடைய அப்பா எழுதி கொடுத்துள்ளார். அதே போன்று பிரச்சனைகுரிய சொத்தையும் வரதராஜன் தான் ஆவணங்களை தயார் செய்து பதிவு செய்துள்ளார் என்றாலும், அதில் 1–ம் எதிரிக்கும் பங்கு இருப்பதால் அவரும் அந்த ஆவணத்தில் சேர்ந்து கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரியல்ல.

3. 3–ம் எதிரியின் மீது பதிவாகியுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் எப்படி, எங்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரம், யார் அந்த ஆவணங்களை தயார் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3–ம் எதிரி 2020 ம் ஆண்டு 1–ம் எதிரியின் மீது எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் எப்படி, எங்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரம், யார் அந்த ஆவணங்களை தயார் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிஸார் விசாரணையில் RDO அலுவலகத்திற்கு சென்று விசாரித்து வாக்குமூலம் பெற்றதை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 நகலாக (Xerox) உள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் உடைய அசலை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.2 ஆவணம் எப்படி, எங்கு தயார் செய்யப்பட்டது என்ற விவரம், யார் அந்த ஆவணங்களை தயார் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரச்சினைக்குரிய சொத்துக்களில் எனக்கும், என்னுடைய சகோதரர் இளையராஜாவிற்கும் எந்தவித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லியது போல எந்த போலி ஆவணமும் தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரு சிவில் வழக்கினை தொடுத்து அதில் எந்தவொரு சொத்தும் கிடைக்காது என்று தெரிந்து ஒரு பொய்யான கிரிமினல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இன்று வரை இந்த பிரச்சினைகுரிய சொத்தில் எனக்கும், என்னுடைய சகோதருக்கும் எந்தவித உரிமையும் இருப்பதாக உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். ஒரு பொய்யான வழக்கை எதிரிகளின் மீது கொடுத்து அதற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**–இல்லை

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.